முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.99/2011** **DW: 2** **23.06.2026**

2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 23ம் நாள் பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியாகிய ராமலிங்கம் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமலிங்கம் | வயது | 60 |
| த/க. பெயர் | கணபதி | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | மங்களூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

<u>**குறுக்கு விசாரணை**</u>

வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர்களை எனக்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தையும் நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை நான் சொன்னதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. எனது எழுத படிக்க தெரியும். வாதி எந்த புல எண்ணிற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண்.323/1ஏ 11 ஆகும். மேற்படி புல எண்ணிற்கான மொத்த விஸ்தீரணம் 47 செண்ட். புல எண்.323/1ஏ 11ல் 47 செண்டுக்கு மட்டும் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். புல எண்.323/1ஏ 11 ஆனது யார் யாருக்கு பாத்தியம் என்றால் முருகன் மகன் கேசவனுக்கு பாத்தியம்.

என்னுடைய பிரமண வாக்குமூலத்தில் புல எண்.323 பல நபர்களுக்கு சொந்தமானது என்று சொல்லியிருந்தால், அது தவறு என்றால் இல்லை, புல எண்.323/1ஏ 11 முருகன் மகன் கேசவனுக்கு பாத்தியமானமது. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக எதன் அடிப்படையில் சாட்சி சொல்கிறேன் என்றால் புல எண்.323/1ஏ 11ஐ நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலம் 2011ம் வருடத்தில் வாங்கியுள்ளேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வழக்கு சொத்திற்கு வில்லங்க சான்று பார்த்துள்ளேனா என்றால் இல்லை. முருகன் நாயக்கர் பெயரில் இருந்ததாகவும், அவரின் மகன் கேசவன் அனுபவத்து வந்ததாலும் நான் கிரையம் பெற்றேன். பிரதிவாதியின் தந்தைக்கு இரண்டு மனைவிகள், ஆனால் அவர்களின் பெயர் எனக்கு தெரியாது. அவர்களுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் வேலாயுத நாயக்கர், ராமசாமி

நாயக்கர், வையாபுரி நாயக்கர், கேசவ நாயக்கர். பெண் வாரிசுகள் பெயர் எனக்கு தெரியாது. இவர்களை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான்.

வாதி மற்றும் பிரதிவாதிக்கும் முன்விரோதம் இருந்ததை பற்றி எனக்கு தெரியுமா என்றால் முன்விரோதம் கிடையாது. நான் எந்த வருடத்தில் கிரையம் பெற்றேன் என்றால் பிப்ரவரி மாதம் 2011 ஆம் வருடம், ஆனால் எனக்கு தேதி தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதி குடும்பத்தினருக்கு முன்விரோதம் இருந்ததாலும், அதனை தெரிந்துகொண்டு, நான் 2011 ஆம் வருடத்தில் கிரையம் பெற்றேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன் என்று சொல்லிவிட்டு, பிரதிவாதியை பார்த்து, பிரதிவாதியும் கொடுத்துவிட்டார் என்று பதிலளித்தார்.

எனது முதன்மை வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் நான் சுமார் 80 ஆண்டு காலமாக தொடர்ச்சியாக, வெளிப்படையாக அனுபவித்து வருகிறேன் என்றும் ஆனால் 2011ம் வருடத்தில்தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு முன்பு எனது கிரையதாரர்கள் அனுபவித்து வந்தனர். எனது பிரமாணவாக்குமூலத்தில் 3ம் பக்கத்தில் வாதி செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறு என்றும், வழக்கு மூலம் இல்லை என்று சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. வாதி தனது ரிப்பிளை ஸ்டேட்மெண்ட்டில் என்ன சங்கதிகள் சொல்லியுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

எனது முதன்மை வாக்குமூலத்தில் 3ம் பக்கத்தில் எனது முன்னோர்களும், எனது தந்தையும் வழக்குச் சொத்தை எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும் அதனால் எனக்கு உரிமையுடன் கூடி எதிர்நிலை பாத்தியம் சித்திக்காது என்றால் சரியல்ல. வாதியின் யு.டி.ஆர் பட்டாவை ரத்து செய்ய வருவாய் துறையில் நான் ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார்கள்.

27.01.1967–ல் பாக பிரிவினை பத்திரத்தில் 1ம் எதிர்வாதிக்கு வழக்குச் சொத்தை ஒதுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் எதிர்வாதியிடம் கிரையம் பெற்றதாலும், 1ம் எதிர்வாதிக்கே சொத்தில் உரிமை இல்லாததாலும், எனது கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் நான் 2011ம் வருடம் கிரையம் வாங்கும் வரை பேச்சுவார்த்தையில் இருந்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு, நான் பேசுவது இல்லை.

நான் சரியான உரிமையாளரிடம் கிரையம் பெறாததால், எனது கிரையம் செல்லாது என்றும் தாவா படி வாதி கோரியவாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

நான் பிரதிவாதி கேசவனிடம் கிரையம் பெற்ற கிரைய பத்த்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது வழக்கறிடம் கொடுத்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்குச் சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நான்தான் அனுபவித்து வருகிறேன். வழக்குச் சொத்தை நான் எவ்வாறு அனுபவிக்கிறேன் என்றால் மழை பெய்தால் மட்டுமே ஓட்டி பயிர் செய்ய முடியும். நான் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஓட்டி பயிர் செய்தேன். நான் சேளம், உளுந்து, துவரம்பருப்பு ஆகியவற்றை பயிர் செய்தேன். மேற்கண்ட மூன்று பயிர்களையும் ஒரே நேரத்தில் பயிர் செய்துவிடுவேன். வழக்குச் சொத்தில் யார் பயிர் செய்து வருகிறார் என்றால் நான்தான் பயிர் செய்துவருகிறேன். வழக்குச் சொத்து என் அனுபவித்தில் இருப்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி கேசவன் 25 வருடங்களுக்கு மேலாக வழக்குச் சொத்தில் பயிர் செய்து, மாடு ஓட்டி வந்தார் என்றும், வழக்கு தாக்கல் செய்த பின்பு அவர் பயிர் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனக்கும் வதிக்கும் முன்விரோம் இருப்பதால் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.06.23 16:02:26 +0530

Principal District Munsif,(F.A.C),
Tittagudi.